(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

**இல. 102.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2019 நவெம்பர் 07 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

61/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பேணிவரப்படுகின்ற வானொலி அலைவரிசைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வானொலி அலைவரிசைகளை பேணிவருகின்ற நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி வானொலி அலைவரிசைகளின் உரிமையாளர்கள் யார் மற்றும் மேற்படி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

(iv) இன்றளவில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு ஒலிபரப்பு மேற்கொள்ளப் பட்டுவராத வானொலி அலைவரிசைகள் உள்ளனவா;

(v) ஆமெனில், அந்த அலைவரிசைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற நிறுவனம் யாது;

(ii) தற்போது மேற்படி வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் முறைசார்ந்த வகையில் இடம்பெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) சமூகப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் ஒருசில வானொலி அலைவரிசைகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரங்கள் ஒலிபரப்பப்படுவதை தடுப்பதற்காக வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக தயாரிப்பாரா;

(iv) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

168/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஊவா மாகாண முதலமைச்சரின் கல்வி ஆலோசகராக திரு. சுஜீவ ஜயசிங்க நியமிக்கப்பட்டிருந்தார் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இவர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி மற்றும் இவருக்கு செலுத்தப்பட்ட மாதாந்த கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iii) இவருடைய கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) குறிப்பாக கல்வித்துறை தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு இவரிடமிருந்த தகைமைகள் யாவை என்பதையும்;

(v) இந் நியமனம் தொடர்பாக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை இச் சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

273/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் மொனறாகலை மாவட்டத்தின் புத்தள பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள *'ராத்திரி'* வாவியை மறுசீரமைப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சுற்றாடல் மற்றும் பிற அங்கீகாரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்குரிய மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மறுசீரமைப்புப் பணிகள் யாவையென்பதையும்;

(iv) சம்பந்தப்பட்ட மதிப்பீட்டின் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி மறுசீரமைப்பின்போது வாவியின் ஆழம் மற்றும் பரப்பளவை அதிகரிக்கச் செய்வதற்காக வாவியின் அடியில் மண் அடுக்குகள் அகற்றப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) மேற்படி மண் அடுக்குகள் அகற்றப்பட்ட விதம் மற்றும் அவை அப்புறப்படுத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

650/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கந்தளாய்-பாத்தியகம விளையாட்டு மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள சுமார் 1.8 கிலோ மீற்றர் நீளமான வீதிகளின் சில பகுதிகளுக்கு காப்பற் இடுவதற்கான சகல நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்து காப்பற் இடும் பணி மாத்திரம் எஞ்சியிருந்த நிலையில், கடுமையான மழை காரணமாக கைவிடப்பட்ட அப்பணி 2015 ஆம் ஆண்டில் அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து ஸ்தம்பிக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) ABC கற்களும் இடப்பட்டு வீதி செப்பனிடப்பட்டுள்ளதால், இதுவரை ஏற்றுள்ள செலவுகளுக்கான பலனைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த வீதிகளின் பகுதிகளுக்கு காப்பற் இட நடவடிக்கை எடுக்கப்படுமா;

(iii) கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் அதிகாமான மக்கள் வசிக்கும் பாத்தியகம இவ்வாறு புறக்கணிக்கப்படுவது ஏன்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

781/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) 2014.08.05 ஆம் திகதி முதல் சிறு தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் உதவி முகாமையாளராக (மனித வள மற்றும் நிருவாகம்) பணியாற்றியுள்ள உத்தியோகத்தர், மூன்று வருட காலப்பகுதியினுள் குறிப்பிட்ட பதவிக்காகத் தோற்றவேண்டிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் தோற்றியுள்ளாரா;

(ii) மேற்படி பதவி வகிப்பவர் குறிப்பிட்ட பரீட்சையில் தோற்றாத அல்லது குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடையாதவரெனில், உடனடியாக அப்பதவியிலிருந்து நீங்க வேண்டும் என்பதை அறிவாரா;

(iii) இதற்கேற்ப 2017.08.05 ஆம் திகதிக்குப் பின்னரும் குறிப்பிட்ட உத்தியோகத்தரை மேற்படி பதவியில் வைத்திருத்தல் தொடர்பில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

874/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரணை வீதியூடான பெப்பிலியான மற்றும் பாமன்கட ஆகியவற்றுக்கு இடையிலான அபிவிருத்தி வேலையை நிறுத்தியமைக்கான காரணங்களையும்;

(ii) இலகு ரயில் கருத்திட்டத்திற்கான பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட வேலை நிறைவுசெய்யப்படக்கூடாதா என்பதையும்;

(iii) இலகு ரயில் கருத்திட்டம் மீதான ஆலோசனை நடவடிக்கைகள் மற்றும் அரச ஆய்வுகருவிகள் மற்றும் பிரச்சாரம் மீது ஏற்கனவே செலவிடப்பட்டிருக்கும் தொகையையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிட்டவாறு செலவிடப்பட்ட பணத்தில் ஜப்பான் வழங்கிய டொலர் நிதி எவ்வளவு என்பதையும்;

(v) மேற்கூறிய கருத்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு ஆலோசகர்கள் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிறுவனங்களினால் விதந்துரைக்கப்பட்டிருக்கின்றனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

940/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் பிரதான அரச வங்கிகளாகிய இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகளின் சில பணியாளர்கள் அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு உள்ளாகி இருப்பதாக சிபாரிசு செய்யப்பட்டு பதவி உயர்வுகள், நிதி ரீதியான அனுகூலங்கள் மற்றும் பல்வேறு வரப்பிரசாதங்களையும் நன்மைகளையும் பெற்றுக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கடந்த ஆட்சியின் போது வங்கிகளில் அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் இடம்பெறவில்லை என்பதை ஏற்றுக் கொள்வாரா;

(iii) இன்றேல், ஏன்;

(iv) வங்கி ஊழியர் சங்கம் உட்பட அனைத்து ஊழியர்களினதும் எதிர்ப்புக்கு மத்தியில், வங்கித்துறை வரலாற்றில் இதற்கு முன்னர் இடம்பெற்றிராத வகையில் கட்சி ஆதரவாளர்கள் சிலருக்கு விசேட வரப்பிரசாதங்கள் வழங்கும் மேற்குறித்த வேலைத்திட்டங்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1021/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டிலுள்ள வாடகை வீட்டுக் குடியிருப்பாளர்களுக்கு வதியும் இடத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு இயலாமை, நீர் கட்டணச் சிட்டைகள் மற்றும் மின் கட்டணச் சிட்டைகள் போன்றவற்றை சமர்ப்பிக்க இயலாமை போன்ற காரணங்களினால் இவர்களின் பிள்ளைகளை பாடசாலையொன்றில் சேர்ப்பதற்கு சிரமங்கள் உள்ளதென்பதையும்;

(ii) அவ்வாறாகவே, அடையாள அட்டையினை பெற்றுக்கொள்வதும் சிரமமாக உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வாறான மிகவும் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1061/ '19

கௌரவ இஸ்ஹாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெக்கிராவை தொடக்கம் கனேவல்பொல நகரம் வரை ஓடுகின்ற சுமார் 7 கி.மீ. நீளமுடைய வீதியானது, கண்டி – அநுராதபுரம் வரை ஒடுகின்ற A - 9 வீதியின் கெக்கிராவ நகரத்திலிருந்து அநுராதபுரம் – மட்டக்களப்பு வரை ஓடுகின்ற A - 11 வீதியில் கனேவல்பொல நகரத்திற்குப் பிரவேசிப்பதற்கான கிட்டிய வழி என்பதையும்;

(ii) இவ்வீதிப் பகுதியானது 50 வருடங்களுக்கும் அதிகமான காலம் அபிவிருத்தி செய்யப்படவில்லையென்பதையும்;

(iii) கடந்த அரசாங்கத்தின் கீழ் இவ்வீதிக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் தற்போது அப்பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வீதியினை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1117/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவம் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பன்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியில், ஹெட்டிபொல எனும் பெயரில் பிராந்திய வைத்தியசாலையொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இவ்வைத்தியசாலைக்கான அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ பணியாட்டொகுதியின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) தற்சமயம் இவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(iv) இப்பிரதேசத்தின் சொத்தான மேற்படி வைத்தியசாலைக்கு தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை பெற்றுக்கொடுத்து, இவ்வைத்தியசாலையை மேலும் விருத்தி செய்வதற்கு அமைச்சு எடுக்கும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1137/ '19

கௌரவ கனக ஹேரத்,— அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) இலங்கையினுள் தாபிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி தயாரிப்பு வலயங்கள் இந்நாட்டு பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றனவா;

(ii) அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவெல மற்றும் பிங்கிரிய ஆகிய பிரதேசங்களை மையமாகக் கொண்டு புதிய ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அத்திகதி யாது

(iv) மேற்படி ஏற்றுமதி தயாரிப்பு வலய நிர்மாணக் கருத்திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாது;

(v) மேற்படி புதிய ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், அவற்றின் பங்களிப்பினை இந்நாட்டுப் பொருளாதாரத்துக்கு பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1153/ '19

கௌரவ கே. காதர் மஸ்தான்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தின் வெங்கலசெட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சூடுவெந்தபுலவு கிராமத்தை அண்மித்த இராசேந்திர குளத்தில் அமைந்துள்ள அரச காணி 1970 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பிரதேச மக்களினால் சேனைப் பயிர்ச் செய்கைக்கும் மந்தை வளர்ப்புக்கும் பிரயோகிக்கப்பட்டு வருவதை அறிவாராவென்பதனையும்;

(ii) ஆமெனில், காணி ஆணையாளர் நாயகத்தின் 2013/01 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய காணிக் கச்சேரிகளின் ஊடாக காணி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியான நபர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதனையும்;

(iii) அவர்களுடைய பெயர்கள் மற்றும் ஏனைய விபரங்களையும்;

(iv) இதுவரையில் அவர்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்றவர்களின் எண்ணிக்கையும்;

(v) அடையாளங் காணப்பட்ட அனைவருக்கும் அனுமதிப்பத்திரம் வழங்குவதிலுள்ள தடைகள் என்னவென்பதனையும்;

(vi) அவ்வாறாயின் குறித்த தடைகளை நீக்கி அனைவருக்கும் காணி அனுமதிப் பத்திரங்களை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதனையும்;

(vii) எப்போது அக்காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுமென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1156/ '19

கௌர டீ.வீ.சானக்க,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 சனவரி தொடக்கம் இற்றைவரையில்,

(i) வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) "கம் உதாவ" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) வீடமைப்பு நிர்மாண கருத்திட்டம் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரச்சார நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

ஆண்டு வாரியாக தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மக்களுக்கு வீடுகளை பெற்றுக்கொடுக்கும் போது தவணைக் கொடுப்பனவு முறையில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனின், இவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) "கம் உதாவ" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளின் பரப்பளவு எத்தனை சதுர அடிகள் என்பதையும்;

(iv) கருத்திட்டத்திற்கு கருத்திட்டம் வீடுகளின் சதுரஅடிகளின் அளவு மாற்றமடையுமா என்பதையும்;

(v) "கம் உதாவ" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் வழங்கப்படுமா என்பதையும்;

(vi) வீடுகளை பெற்றுக்கொடுக்கும் போது பயனாளிகளை தெரிவு செய்வதற்கு ஏதேனும் முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1168/ '19

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சுங்க திணைக்களத்தின் சுங்க உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவின் கணிப்பீடு தாபனவிதிக் கோவையின் VIII ஆவது அத்தியாயத்தின் 6.1 உப பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதற்கு மேலதிகமாக இலக்கம் 1570/17 மற்றும் 2007.10.26 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் சுங்க உத்தியோகத்தர்களை மேலதிகநேர சேவையில் ஈடுபடுத்துவதற்கான கட்டணம் குறித்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ஆ) (i) சுங்க உத்தியோகத்தர்களுக்கு மேலதிகநேரக் கொடுப்பனவு செலுத்தும் போது மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதில்லை என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு மிகக் குறைந்த மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்படுவதால், அவர்களுக்கு பாரதூரமான அநீதி இழைக்கப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனின், சுங்க உத்தியோகத்தர்களுக்கு சட்டரீதியாக கிடைக்கவேண்டிய மேலதிக நேரக்கொடுப்பனவினை தாபனவிதிக் கோவையின்படி கணிப்பிடுவதற்கும் இதுவரையில் உரியவாறு செலுத்தாத மேலதிகநேரக் கொடுப்பனவை நிலுவைத் தொகையுடன் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1177/ '19

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றில் இருக்கின்ற மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு சிறுவர் இல்லத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் துறை, சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களினால் நிருவகிக்கப்படுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இல்லத்திலும் தங்கியுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை, முகவரி மற்றும் நிருவகிக்கும் நிறுவனத்தின் பெயர் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த இருபது வருட காலப்பகுதிக்குள் பெற்றோர்/பாதுகாவலர் அந்தஸ்தை சட்டபூர்வமாக உரித்தாக்கிக் கொண்டு வெளிநாட்டவர்களினால் பொறுப்பு கையேற்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி சிறுவர்கள் தற்போது வாழும் நாடு, அவர்களின் பாதுகாவலர்களின் முகவரிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) நாட்டினுள் காணப்படுகின்ற ஏதேனும் சிறுவர் இல்லம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவு கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி உத்தரவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலாயின், சம்பந்தப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அற்றோணித் தத்துவம் (திருத்தம்),— (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல.1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 1.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2019 திசெம்பர் 03 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி(இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தேசிய புத்தாக்க முகவராண்மைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பில் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூன் 18 ஆம் திகதிய 2128/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பில் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2137/85 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பில் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2137/86 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

5.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

6.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(தஇ) மற்றும் 61(1)(தஈ) பிரிவின் கீழ் இலங்கை நீர்ப்பரப்பினுள் மீன் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களை பேணிக்காத்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 03 ஆம் திகதிய 2008/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈட்டிகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 03 ஆம் திகதிய 2008/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் பிரிவு 29 மற்றும் பிரிவு 61(1)(ப) என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் தம்புவா மீன் இனங்களைப் பிடிப்பதைத் தடைசெய்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2014/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ப) பிரிவின் கீழ் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி முகாமைத்துவம் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 15 ஆம் திகதிய 2023/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ஐ) மற்றும் 61(1)(ந) பிரிவின் கீழ் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தலையிடுவதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகளை அமுலாக்கல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 13 ஆம் திகதிய 2027/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் மீன்கள் தரையிறக்கல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 13 ஆம் திகதிய 2027/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 13.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 64(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61(1)(ஆ) பிரிவின் கீழ் மாதல் மீன்பிடி (கரைவலை) தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஏப்றல் 05 ஆம் திகதிய 2065/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ந) பிரிவின் கீழ் வெளிநாட்டுக் கொடி ஏற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற இலங்கைப் பிரசைகளுக்கான ஆகக்குறைந்த நியமங்கள் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 25 ஆம் திகதிய 2107/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 6, 7, 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 பிரிவின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடு தொடர்பில் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 18 ஆம் திகதிய 2115/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்,— தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் கொட்டுஅத்தாவல சரணாலயம் தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்ரவரி 23 ஆம் திகதிய 2007/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்,— தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் கொடிகஹாகந்த சரணாலயம் தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2039/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்,— தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் காயன்கேணி கடலோர சரணாலயம் தொடர்பில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2118/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல.4),— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூன் 22 ஆம் திகதிய 1920/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

நிதி அமைச்சர்,— நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் திட்டம்,— 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி நன்மைக் கொடுப்பனவுகளுக்கான குறைவருமானம் பெறும் குடும்பங்களை இனங்காண்பதற்கான செயன்முறை தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 18 ஆம் திகதிய 2141/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்டவாறான 2019 யூன் 20 ஆம் திகதிய 2128/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான திட்டம் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தீர்ப்பாளர்களை பதிவுசெய்தல் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 08 ஆம் திகதிய 2113/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 22.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53(2) மற்றும் 54(1)(அ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 23.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தகவற் செயலகம் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 24.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2019 செப்டம்பர் 05),— "1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 29(2)(ஈ) ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான திட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிரல் 11 ஆம் திகதிய 2118/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 25.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 26 ஆம் திகதிய 2142/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்108 (1) உறுப்புரையின் பிரகாரம் கௌரவ உச்ச நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்குச் செலுத்தும் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதோடு, 108(2) ஆம் உறுப்புரையின் மூலம் அந்த நீதிபதிகளை நியமித்த பின்னர் அவர்களுக்குச் செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரிமைகளைக் குறைக்கக்கூடாதென ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதனாலும்;

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 25 ஆம் பிரிவு திருத்தப்பட்ட இல 1190/18 ஆம் இலக்க, 2001.06.28 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஓய்வுபெறும் போது பெற்றுக்கொண்ட சம்பளத்தின் 90% ஐ ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடைவர் ஆவாரென்பதனாலும்;

உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு தனது விருப்பத்தின் பேரில் அவர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியத்தைப் போன்ற 24 மடங்கு தொகையை ஓய்வூதியப் பணிக்கொடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், நீண்ட காலமாக இந்தப் பணிக்கொடை ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படாமல் முழுமையான ஓய்வூதியத் தொகையும் மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ளது. சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிக்கொடையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிப்பதன் மீது அந்தப் பணிக்கொடையை மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிட்டுக்கொள்ளும் முறைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொருள்கோடல் செய்து, முற்பணத் தொகையாக உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பணிக்கொடையை 10 வருடங்களுக்குள் அதாவது, 120 மாதாந்த தவணைகளில் மீண்டும் அறவிட்டுக்கொள்வது அரசியலமைப்பின் 108(2) ஆம் உறுப்புரையை மீறியதாக அமையாதென்பதனாலும்;

உச்ச நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களின் ஓய்வூதியக் குறைப்பு அல்லது அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மீது தாக்கம் செலுத்தும் சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசியலமைப்பினால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதை சட்டத்துறை தலைமையதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாதலாலும்;

அவ்வாறே, அண்மையில் நீதிமன்றத் துறைக்கு உயர் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

அதற்கிணங்க, உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையை அமுலிலுள்ள சட்டத்திற்கு அமைவாக 120 மாதங்களில் மீண்டும் அறவிடப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 27.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் சைகைகள், சமிக்ஞைகள், அடையாளங்கள் மற்றும் வீதிக் குறியீடுகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூன் 18 ஆம் திகதிய 2128/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 28.

ஈடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 31.

பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 32.

விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளைத் தடுத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 33.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 34.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 35.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 36.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 37.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 38.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 39.

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 40.

காலவிதிப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 41.

நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 42.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 43.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015/2016),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 44.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவச் சட்டத்தின் 23 பிரிவின் கீழ், 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 45.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 46.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 47.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய, 2019.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 48.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 49.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 50.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 51.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016/2017),— 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. PED 12, அத்தியாயம் 6.5.3 இன் பிரகாரம், 2018.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 52.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2015),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய, 2018.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 53.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 54.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 55.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 56.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2019.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 57.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 58.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2017.11.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 59.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 60.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2019.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 61.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 62.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 63.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 64.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 65.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 யூலை 27 ஆம் திகதிய 2133/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 66.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதி அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2138/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 67.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய பொதுமக்கள் சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதி அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2143/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 68.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 69.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 70.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

71.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

72.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

73.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

74.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

75.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

76.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

77.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

78.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

79.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

80.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

81.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 82.

இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தபானம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

83.

ஸ்ரீ நாத அகஸ்தான சர்வதேச புத்த தியான நிலைய செயலாற்றுகைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

84.

கே.கே. பியதாஸ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.